**Minutes of the Public Hearing Meeting held on 19.06.2025 at 11.00 AM in Dr.Siddhar Swamigalin Sri Balamurugan Aalaya Annathaana Mandapam, Opposite to Balamurugan Temple, Koppampatti Village, Kulathur Taluk, Pudukkottai District to establish M/s. S. Devendiran Rough Stone & Gravel Quarry with an extent of 2.28.0 Ha at S.F.Nos. 33, 34/3, 34/4, 34/5, 34/6 & 34/8 of Killukulavaipatti Village, Kulathur Taluk, Pudukkottai District.**

**Name of the Project:**

M/s. S. Devendiran Rough Stone & Gravel Quarry with an extent of 2.28.0 Ha at S.F. Nos. 33, 34/3, 34/4, 34/5, 34/6 & 34/8 of Killukulavaipatti Village, Kulathur Taluk, Pudukkottai District.

**List of Officials participated in the meeting:**

1. Tmt. V. Deivanayagi,
   Revenue Divisional Officer (I/C),
   Illuppur.

2. Thiru. K. Selvakumar,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Pudukkottai District.

3. Thiru. A. Solai Karuppaiah,
   Tahsildar,
   Kulathur.

4. Thiru. M. Manimaran,
   Deputy Superintendent of Police,
   Keeranur,
   Pudukkottai.

5. Thiru. K. Deepan,
   Revenue Inspector,
   Killukkottai.

6. Thiru. C. Selvam,
   Revenue Inspector,
   Killukkottai,

7. Tmt. A. Uma,
   Village Administrative Officer,
   Killukkottai,
   Pudukkottai.

8. Thiru. M. SenthilKumar,
   Inspector,
   Keeranur Police Station,
   Pudukkottai.

9. Thiru. M. Venkada Subramanian,
   Assistant Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Pudukkottai District.

**<u>List of Participants related to the project:</u>**

1. Thiru. Uma Maheswaran,
   Co-partner,
   Geo Technical Mining Solution,
   Dharmapuri.

In the public hearing, 66 persons were participated, including Government Officers, Project proponents and the general public. (Enclosed video Annexure-A).

**<u>Welcome note given by District Environmental Engineer:</u>**

The District Environmental Engineer, Tamil Nadu, Pollution Control Board, Pudukkottai District has welcomed the Revenue Divisional Officer, Illuppur who presided over the function. He welcomed the Tahsildar, Kulathur, other revenue officials and other Government officials. He also welcomed the Proprietor of M/s. M/s. S. Devendiran Rough Stone & Gravel Quarry, Project Proponent, Press, NGOs

and general public who were attended the Public Hearing meeting.

He also informed that as per Ministry of Environment & Forest, New Delhi vide EIA Notification dated 14.09.2006, certain type of projects, public opinion has to be obtained before the issue of Environment Clearance. He added that the public notice informing the conducting of public hearing was published in The Dinamalar & The New Indian Express on 13.05.2025. This public hearing was conducted for M/s. S. Devendiran Rough Stone & Gravel Quarry with an extent of 2.28.0 Ha at S.F.Nos. 33, 34/3, 34/4, 34/5, 34/6 & 34/8 of Killukulavaipatti Village, Kulathur Taluk, Pudukkottai District to obtain the views of public.

He also informed that the views of public would be recorded and it would be forwarded to the State Environment Impact Assessment Authority, Chennai after getting approval from the District Collector, Pudukkottai.

District Environmental Engineer informed that M/s. S. Devendiran Rough Stone & Gravel Quarry project proponent would explain about the project after that the public could give their opinion either verbally or in writing about the project.

**Revenue Divisional Officer, Illuppur:**

She welcomed the gathering and informed that the Project Proponent would explain about their proposed project outlay and Environmental Impact Assessment study carried out through Power Point Presentation.

**Power Point Presentation by the Project Proponent:**

Thiru. Uma Maheswaran, Co-partner, Geo Technical Mining Solution, Dharmapuri of M/s. S. Devendiran Rough Stone & Gravel Quarry has explained about the details of the project outlay, Environmental Impact Assessment report and Environmental Management Plan through Power Point Presentation. (Copy of the detail is enclosed in Annexure -B).

**District Environmental Engineer:**

The District Environmental Engineer requested the public to register their views on this project either verbally or in writing by giving their name and village details.

Followed by this, Public Hearing process started.

1. **Thiru. Aandar, Koppampatti**

He introduced himself as Aandar from Koppampatti. He thanked all the officials and the public who came to the meeting. He stated that he has no objection permit to operate the stone quarry. He registered his support for the proposed project.

2. **Thiru. Veerasingam, Koppampatti**

He introduced himself as Veerasingam from Koppampatti. He thanked the government officials present at the meeting. He stated that if permit to operate quarry the public will get employment opportunities and there will be better economic development. He registered his support opinion for the project.

3. **Thiru. Karuppaiah, Koppampatti**

He introduced himself as Karuppaiah from Koppampatti. He stated that permission may be granted to operate quarry and the quarry owner is doing good for the village. He registered his support opinion for the project.

4. **Thiru. M. Selvam, Mohanur, Namakkal District**

He started his speech by introducing himself as M. Selvam and he is from Mohanur, Namakkal District. He informed that about 450 families were worshipping Karuppar temple for four generations at Koppampatti. He said that once there was government car track go to the temple but, now there is no path go to the temple to worship of the god. Because, the quarry is operating there for about 30 years and blocking the path. He requested the government officials and village people to arrange them to provide a car track to go to the temple for worship. He thanked all and he registered his views about the project.

5. **Thiru. Pandiyan, Koppampatti**

He introduced himself as Pandiyan from Koppampatti. He stated that he is willing to operate the stone quarry. He registered his support opinion for the project.

6. **Thiru. Mathiyalagan, District Deputy Secretary, Vellakalpatti**

He introducing himself as Mathiayalagan from Vellakalpatti. He stated that he was the District Deputy Secretary. He applealed that the quarry owners had

promised to give employment to 16 people only for local people and further he asked them not to take other state employees as worker. He further added that local people from Koppampatti and Killukulavaippatti only should give employment in the quarries located in Koppampatti Village. He quetioned that the quarry work will be done through machines or humans through association. District Environmental Engineer has replied that this is not argument stage and your entire spoken view is being video recorded. He is requested that your views will be registered by orally or written form.

**7. Thiru. Arivalagan, Koppampatti**

He introduced himself as Arivalagan from Koppampatti. He greeted Revenue Divisional Officer, Tahsildar and Police officials. He added that he has no objection permit to operate the Devendran stone quarry. He registered his support opinion by saying that he full heartedly welcomed the stone quarry project.

**8. Thiru. Kumar, Vellakalpatti**

He stated that his name is Kumar from Vellakalppatti. He said that he has no objection to grant permission to brother Devendran stone quarry. He registered his support views for the project.

**9. Thiru. Thangamani, Koppampatti**

He introduced himself as Thangamani from Koppampatti. He stated that more jobs should be given to people by way of reducing use of machines. He registered his support opinion for the project.

**10. Thiru. Thilagar, Koppampatti**

He said that his name is Thilagar from Koppampatti. He informed that he has no objection to grant permission to operate Devendran stone quarry. He registered his support views for the project.

**11. Thiru. Pannirselvam, Vellakalpatti**

He introduced himself as Pannirselvam from Vellakalppatti. He stated that he has no objection to operate the Devendran stone quarry and accepts everyone and also there is no short comings. He registered his support opinion for project.

**12. Thiru. Muthukrishnan**

He introduced himself as Muthukrishnan. He stated that he was an NGO and he worried that he cannot speak in Tamil. He added he was late in the meeting. He stated that where this activity was started and causing pollution to the surroundings. He requested the stone quarry owners to do some development activities in the nearby surrounding villages, since water is getting polluted. He added that the arrangements should be made to provide drinking water. Also he added that 3000 tree saplings should be planted not only in industries but also in the villages. He further stated that local people should be employed instead of other state employees. For the local work to do to use local people and not to take other area employees and also to use other people for technical works. He requested that children's education should be given more importance particularly elementary schools in villages and uniform should be given to the school students. He registered his views for the project.

**13. Thiru. K, Thamaraiselvam, Koppampatti**

He saying that his name is Thamaraiselvam from North Street, Koppampatti. He said that he was working as watchman in Karuppar Kovil and the path go to the Karuppar kovil is blocked for the past 10 to 15 years and people are suffering lot because of it. He questioned that where is the path? and there is no path to reach Karuppar Kovil. He added that a person from Chennai asked that he was a big man in society causing sin he will come to the Karuppar temple if there is a situation that the car upto reach temple only to worship of family deity or otherwise there is no possible by walk go to the kovil. He also said that the kovil car track is blocked for a long time due to quarrying activities. He requested that to provide alternate car track to go to the kovil for the public use. He registered his views for the project.

**14. Thiru. Inbasekaran, NGO, Arakkonam**

He introduced himself as Inbasekaran from Arakkonam. He welcomed Collector, Revenue Divisional Officer, District Environmental Engineer, Village people, Government officials, Video camera man, Technical officers, Police officials and Political persons. He said that people will get employment oppurtunity, economic development, and stone jelly materials would be available at lower prices because of this stone quarry. On behalf of the village people he requested that the Tamil Nadu

Government to grant permission to this stone quarry. He registered his support opinion for the project.

**15. Thiru. Prabhu, Koppampatti**

He said that his name is Prabhu from Koppampatti. He stated that the quarry owner has given donation to temple works. Also he has given contribution to the cement road in the village and sports development activities. Further he added that he has done some contributions to educational developments. He stated that he has no objection to establish the stone quarry in this village and he has given full support to them. He registered his support views for the project.

**Revenue Divisional Officer, Illuppur:**

After that, the Revenue Divisional Officer, Illuppur said that if any public has to say any comments / opinion, they can inform. Then she said that the public hearing meeting was closed as no one from the public came forwarded to say their opinion.

**Vote of Thanks:**

The District Environmental Engineer has informed that the public could submit their comments in writing at the office of the District Collector or the Tamil Nadu Pollution Control Board, Pudukkottai office. The District Environmental Engineer thanked the Revenue Divisional Officer, Illuppur for presiding over the Public hearing meeting and the other Government Officials for attending the meeting and also he thanked the Proprietors of the stone quarries, Workers, Project Proponent, NGOs, Press reporters, Police officials, social activists and general public who were participated in the Public Hearing Meeting.

The meeting came to an end

Encl.:

1. Attendance sheet of the participants(A)
2. Project Proponent's power point presentation(B)
3. Video(CD) of the Public Hearing (C)
4. Draft of Environmental Impact Assessment Report and Executive Summary in Tamil and English (D)
5. Written Petition (E) - 11 Nos.

20/6/25

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Pudukkottai.**

**Revenue Divisional Officer,**
**Illuppur.**

**புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கொப்பம்பட்டி கிராமம், பாலமுருகன் ஆலய எதிர்புறம், Dr.சித்தர் சுவாமிகளின் ஸ்ரீ பாலமுருகன் ஆலய அன்னதான மண்டபத்தில் 19.06.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற தி/ள்.சீ.தேவேந்திரன் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி, விஸ்தீரணம் - 2.28.0 ஹெக்டர், புல எண். 33, 34/3, 34/4, 34/5, 34/6 & 34/8, கிள்ளுக்குளவாய்ப்பட்டி கிராமம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள்.**

**திட்டத்தின் பெயர்** :

தி/ள். சீ. தேவேந்திரன் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி, விஸ்தீரணம் - 2.28.0 ஹெக்டர், புல எண். 33, 34/3, 34/4, 34/5, 34/6 & 34/8, கிள்ளுக்குளவாய்ப்பட்டி கிராமம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

**கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள்:**

1. திருமதி. வே. தெய்வநாயகி,
   வருவாய் கோட்ட அலுவலர்(I/C),
   இலுப்பூர்.

2. திரு. கு. செல்வகுமார்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

3. திரு. அ. சோளைக் கருப்பையா,
   வட்டாட்சியர்,
   குளத்தூர்.

4. திரு. M. மணிமாறன்,
   காவல் துணைக் கண்காணிப்பாளர்,
   கீரனூர் காவல் நிலையம்,
   கீரனூர், புதுக்கோட்டை

5. திரு. க. தீபன்,
   வருவாய் ஆய்வாளர்,
   கிள்ளுக்கோட்டை

6. திரு. C. செல்வம்,
   வருவாய் ஆய்வாளர்,
   குன்றாண்டார்கோயில்

7. திருமதி. அ. உமா,
   கிராம நிர்வாக அலுவலர்,
   கிள்ளுக்கோட்டை,
   புதுக்கோட்டை.

8. திரு. M. செந்தில் குமார்,
   காவல் ஆய்வாளர்,
   கீரனூர் காவல் நிலையம்,
   கீரனூர், புதுக்கோட்டை.

9. திரு. மு. வெங்கட சுப்ரமணியன்,
   உதவி பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

**திட்டம் சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் :**

1. திரு. உமா மஹேஸ்வரன்,
   இணை பங்குதாரர்,
   ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யூசன்,
   தருமபுரி.

**அரசு அலுவலர்கள், திட்ட முனைவோர் மற்றும் பொதுமக்கள் உட்பட மொத்தம் 66 நபர்கள் பங்கேற்றனர்.** (இணைப்பு – 'அ' வாயிலாக பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

தி/ள். சீ. தேவேந்திரன் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி, விஸ்தீரணம் - 2.28.0 ஹெக்டர், புல எண். 33, 34/3, 34/4, 34/5, 34/6 & 34/8, கிள்ளுக்குளவாய்ப்பட்டி கிராமம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், புதுக்கோட்டை அவர்கள் கீழ்க்கண்டவாறு வரவேற்புரை ஆற்றினார்கள்:**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், புதுக்கோட்டை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை

புரிந்து தலைமை தாங்க வந்திருக்கும் வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்கள் மற்றும் இக்கூட்டத்தில் பங்குபெற்ற வட்டாட்சியர், குளத்தூர் வட்டம், மற்ற வருவாய் துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், தி/ள். சீ. தேவேந்திரன் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவன உரிமையாளர், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர், மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, சிலவகைத் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட்டு பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவது அவசியமாகிறது. இது தொடர்பாக தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் 13.05.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இன்று நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் தி/ள். சீ. தேவேந்திரன் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி என்ற நிறுவனம் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளுக்குளவாய்ப்பட்டி கிராமம், புல எண். 33, 34/3, 34/4, 34/5, 34/6 & 34/8, ஆகியவற்றில் 2.28.0 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் கல்குவாரி நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டுப் பெறுவதற்காக இக்கூட்டம் நடத்தப்படுகிறது என தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் இங்கு பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்குப்பின் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக் கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தி/ள். சீ. தேவேந்திரன் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பற்றி விவரித்தபின், பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம் என்று கூறினார்.

**வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்:**

வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்து இத்திட்டப் பிரதிநிதிகளைத் திட்டம் குறித்து விவரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**திட்டப் பிரதிநிதி:**

திரு. உமா மஹேஸ்வரன், இணை பங்குதாரர், ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யூசன், தருமபுரி அவர்கள் தி/ள். சீ. தேவேந்திரன் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி சார்பாக இத்திட்டம் குறித்தான விவரங்கள் வரைவு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் விரிவாக இக்கருத்து கேட்பு கூட்டத்தில் எடுத்துரைத்தார். இதன் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 'ஆ')

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் விபரம் என்பதை தெரிவித்து அதன் பின்பு தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்துவடிவிலோ பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

**பொதுமக்கள் கருத்து கேட்பு:**

**1. திரு. ஆண்டார், கொப்பம்பட்டி**

எனது பெயர் ஆண்டார், எனது ஊர் கொப்பம்பட்டி. இங்கு வருகை தந்திருக்கும் அதிகாரிகள் அனைவருக்கும், மற்றும் சுற்று வட்டார பொதுமக்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த கல்குவாரியில் கல் உடைப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை, தாராளமாக செயல்படுத்துங்கள் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்

**2. திரு. வீரசிங்கம், கொப்பம்பட்டி**

எனது பெயர் வீரசிங்கம், எனது ஊர் கொப்பம்பட்டி. இங்கே வருகை தந்துள்ள அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் மனமார்ந்த நன்றி. இந்த கல்குவாரி நடத்த அனுமதி கொடுப்பதினால் பொதுமக்களுக்கு வேலை வாய்ப்பும் அதிக பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**3. திரு. கருப்பையா, கொப்பம்பட்டி**

எனது பெயர் கருப்பையா, எனது ஊர் கொப்பம்பட்டி. இந்த கல்குவாரி இயக்க அனுமதி கொடுக்கலாம். அவர் ஊருக்கு நல்லது தான் செய்கிறார் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**4. திரு. M. செல்வம், மோகனூர், நாமக்கல் மாவட்டம்**

எனது பெயர் M.செல்வம், நாமக்கல் மாவட்டம், மோகனூர். நாங்கள் இங்கு கொப்பம்பட்டியில் உள்ள கருப்பு கோவிலுக்கு குலதெய்வமாக நான்கு

தலைமுறையாக வழிபட்டு வருகின்றோம். இந்த கோவிலுக்கு சுமார் 450 குடும்பங்கள் வழிபட்டு வருகின்றோம். எங்கள் கோவிலுக்கு அரசு வண்டி பாதை உள்ள இடம். தற்போது கோவிலுக்கு செல்ல பாதை இல்லை. அந்த வழியாக தான் கல்குவாரி இயங்கி சுமார் ஒரு 30 வருடமாக கோவிலுக்கு செல்ல பொது மக்களுக்கு தடையாக இருக்கிறது. அதனால் அரசு அதிகாரியும், ஊர் பொதுமக்களும் எங்களது கோவிலுக்கு சென்று வழிபடுவதற்கு பாதை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கூறி தனது கருத்தினை பதிவு செய்தார்.

**5. திரு. பாண்டியன், கொப்பம்பட்டி**

எனது பெயர் பாண்டியன், எனது ஊர் கொப்பம்பட்டி. எனக்கு கல்குவாரி இயங்குவதற்கு சம்மதம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**6. திரு. மதியழகன், மாவட்ட துணை செயலாளர், வெள்ளகல்பட்டி**

எனது பெயர் மதியழகன், நான் வெள்ளகல்பட்டி, மாவட்ட துணை செயலாளர். இந்த கல்குவாரியில் உள்;ரில் உள்ள 16 பேருக்கு வேலை தருவதாக நீங்கள் கூறியுள்ளீர்கள். அந்த 16 பேரும் உள்;ரில் உள்ள ஆட்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். வெளி ஆட்களுக்கு வேலை தர கூடாது. இங்கு வடநாட்டுக்காரர்களையும் பணியில் சேர்க்க வேண்டாம். இங்கு கொப்பம்பட்டியில் உள்ள கல்குவாரிகளில் உள்;ரில் உள்ள கொப்பம்பட்டி, கிள்ளுக்குளவாய் பட்டி இந்த கிராமத்து மக்களை வேலைக்கு சேர்த்துக் கொள்ளுங்கள் என்றார். அடுத்ததாக, இந்த வேலையை இயந்திரத்தை கொண்டு செய்கிறீர்களா அல்லது மனித ஆற்றல் கொண்டு குழுவினர் மூலம் செய்கிறார்களா என்று வினாவினார். அதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் அய்யா நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல இது விவாத மேடை அல்ல. உங்களுடைய பேச்சு கருத்துகள் அனைத்தும் இங்கே பதிவு செய்யப்படுகிறது. எனவே, நீங்கள் சொல்லும் கருத்துக்களை நேரடியாகவும், எழுத்து வடிவிலும் இங்கே பதிவு செய்யலாம் என்று கூறினார்.

**7. திரு. அறிவழகன், கொப்பம்பட்டி**

எனது பெயர் அறிவழகன், எனது ஊர் கொப்பம்பட்டி. அனைவருக்கும் வணக்கம். இங்கு வந்திருக்கும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும், தாசில்தாருக்கும், காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கும், காவல் ஆய்வாளர் அவர்களுக்கும் பணிவான காலை வணக்கத்தை தெரிவித்துக்கொண்டார். தேவேந்திரன் என்பவருக்கு கல்குவாரி இயக்க அனுமதி தருவதற்கு எந்த வித தடையில்லை என்றும், முழு மனதார வேண்டி விரும்பி கூறுவதாக தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**8. திரு. குமார், வெள்ளகல்பட்டி**

எனது பெயர் குமார், எனது ஊர் வெள்ளக்கல்பட்டி. தேவேந்திரன் அண்ணன் அவர்களுக்கு கல்குவாரி அனுமதி கொடுப்பதற்கு எனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**9. திரு. தங்கமணி, கொப்பம்பட்டி**

எனது பெயர் தங்கமணி, எனது ஊர் கொப்பம்பட்டி. கல்குவாரியில் இயந்திரங்களை குறைத்துக் கொண்டு அடித்தட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன் எனக்கூறி தனது கருத்தினை பதிவு செய்தார்.

**10. திரு. திலகர், கொப்பம்பட்டி**

எனது பெயர் திலகர், நான் கொப்பம்பட்டியில் இருந்து வருகிறேன். தேவேந்திரன் அவர்களின் கல் குவாரிக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை அதனை தொடரலாம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**11. திரு. பன்னீர்செல்வம், வெள்ளகல்பட்டி**

எனது பெயர் பன்னீர்செல்வம், நான் வெள்ளக்கல்பட்டி இருந்து வருகிறேன். தேவேந்திரன் அவர்கள் கல்குவாரி இயக்குவதற்கு எந்த தடையும் இல்லை. மக்கள் அனைவரையும் ஏற்று கொள்கிறார்கள் அதனால் எந்த குறையும் இல்லை என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**12. திரு. முத்துகிருஷ்ணன், தன்னார்வலர்**

எனது பெயர் முத்து கிருஷ்ணன், அரசு சாரா நிறுவனம். தமிழில் பேச முடியாததற்கு வருந்துகிறேன். இன்று நான் தாமதமாக வந்து இந்தக் கூட்டத்தில் பங்கேற்கிறேன். ஐயா, இந்த வகையான தொழில் எங்கிருந்து தொடங்கியது, சில மாசுபாடுகளை உருவாக்குகிறது. ஏனென்றால் கல்குவாரி உரிமையாளரிடம் தயவுசெய்து சுற்றியுள்ள கிராமங்களில் சில நல்ல மேம்பாட்டு நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என நான் கேட்டுக்கொள்கிறேன். முதலில் தண்ணீர் மாசுபடுவதினால் சுற்றியுள்ள கிராமங்களில் குடிநீரை வழங்க ஏற்பாடு செய்து தாருங்கள். பசுமை வளத்தினை வளப்படுத்த தயவுசெய்து குறைந்தபட்சம் 3000 மரக்கன்றுகளை நடுமாறும், அதனை தொழிற்சாலைப் பகுதியில் மட்டுமல்லாமல் கிராமங்களிலும் நடவேண்டும் என்று கூறினார். அடுத்து, தயவுசெய்து வெளியூர் ஊழியர்களை விட உள்;ர் பகுதியில் உள்ளவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும், தொழில்நுட்பத் தொழிலாளர்கள் என்பதை விட்டுவிடுங்கள். சாதாரண

வேலைகளுக்கு உள்;ர் தொழிலாளர்களை பயன்படுத்துங்கள். வெளியூர் தொழிலாளர்களை எடுக்க வேண்டாம். மற்றொரு வேண்டுகோள் என்னவென்றால், நீங்கள் குழந்தைகளின் கல்வியை ஆதரிக்கிறீர்கள். ஆகவே, தயவுசெய்து கிராமங்களில் தொடக்கப்பள்ளியிலும் குழந்தைகளுக்கு முறையான கல்வியுடன் சீருடை வழங்குங்கள் என்று கூறி தனது கருத்தினை பதிவு செய்தார்

**13. திரு. கோ. தாமரை செல்வம், வடக்கு தெரு, கொப்பம்பட்டி**

எனது பெயர் கோ. தாமரைச்செல்வம், நான் கொப்பம்பட்டி, வடக்கு தெருவில் இருந்து வருகிறேன். நான் கருப்பு கோவில் காவலாளியாக இருக்கிறேன். நாங்கள் சுமார் ஒரு பத்து பதினைந்து வருடமாக கோவிலுக்கு வழியில்லாமல், கோவிலுக்கு வரும் மக்கள் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். எங்களுக்கு வழி என்ன ஆயிற்று? குலதெய்வ கோவிலுக்கு வருவதற்கு வழியே இல்லை. அப்படியே ரொம்ப பாவம் பண்ணிக்கிட்டு இருக்கின்ற பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் கோயில் வரை காரிலே செல்ல முடியும் என்ற நிலை இருந்தால்தான் வர முடியும், இல்லையென்றால் நாங்கள் நடந்து வருவதற்கு வாய்ப்பே இல்லை என்று சென்னையில் இருந்து ஒருவர் இன்று வரை கேட்டுக்கொண்டே இருக்கிறார். அதனால் நீண்ட நாட்களாக அந்த வழி தடுக்கப்பட்டு விட்டது. அதாவது வண்டி பாதையாக இருந்த வழி கல்குவாரியினால் தற்பொழுது தடுக்கப்பட்டு விட்டது. ஆதலால் எங்களுக்கு வேறு வழியில் மாற்று பாதையாக கொடுத்து வழி செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்வதாக தனது கருத்தினை பதிவு செய்தார்.

**14. திரு. இன்பசேகரன், தன்னார்வலர், அரக்கோணம்**

எனது பெயர் இன்பசேகரன், அரக்கோணம். மாண்புமிகு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் தனது அன்பான பணிவுடன் கூடிய வணக்கங்கள். கிராம மக்கள், அரசு அலுவலர்கள், வீடியோ கேமரா மேன், டெக்னிக்கல் அலுவலர், என் அன்புக்கு மேலான காவல்துறை ஆய்வாளர், அரசியல் பிரமுகர் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எனது இனிய அன்பான காலை வணக்கம் என்றார். இந்த கல்குவாரி மற்றும் உடைக்கல் நிறுவனம் மூலம் வேலைவாய்ப்பு, பொருளாதார வசதி மற்றும் குறைந்த விலையில் கற்கள் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு, இதற்கு தக்க அனுமதி அளித்து உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வருமாறு கிராம மக்கள் சார்பாக மற்றும் தமிழ்நாடு அரசுக்கு எனது அன்பான பணிவான வேண்டுகோளை விடுக்கிறேன் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**15. திரு. பிரபு, கொப்பம்பட்டி**

எனது பெயர் பிரபு, கொப்பம்பட்டி. எங்க ஊரில் உள்ள கோயில்களுக்கு எல்லா பணிகளும் சிறப்பாக செய்வதற்கான நிறைய நன்கொடை வழங்கியுள்ளார்கள். இதே போல் எங்க ஊரில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு அவர்கள் நிறைய பங்களிப்பினை வழங்கி இருக்கிறார்கள். அதே போல விளையாட்டு துறைக்கு தேவையான பரிசு அளிப்பதற்கும் ஆதரவு அளித்துள்ளனர். மேலும், கல்வித்துறைக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ ஓரளவுக்கு அதையும் செய்து ஆதரவு கொடுத்து செய்துள்ளனர். எங்கள் ஊரில் அவர்கள் கல்குவாரி அமைப்பதற்கு எங்களுக்கு எந்த ஒரு ஆட்சேபனையும் கிடையாது. எங்களுடைய முழு ஆதரவும் அவர்களுக்கு இருக்கும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்:**

அதற்கு பின்பு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்கள் யாரேனும் கருத்து சொல்வதாக இருந்தால் தெரிவிக்கலாம் என்று கூறினார். பின்பு பொதுமக்கள் யாரும் கருத்து தெரிவிக்க முன்வராததால் கூட்டத்தினை முடித்து வைப்பதாக தெரிவித்தார்.

**நன்றியுரை:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துவடிவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலோ அல்லது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புதுக்கோட்டை அலுவலகத்திலோ சமர்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொண்டார். தி/ள். சீ. தேவேந்திரன் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திய வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்களுக்கு நன்றி கூறினார். இதர வருவாய் துறை அதிகாரிகள், கல்குவாரி நிறுவன உரிமையாளர்கள், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கை நிருபர்கள் மற்றும் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக்கொண்டார்.

கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**இணைப்பு:**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (அ).
2. திட்ட பிரதிநிதிகளின் நிழற்பட விளக்க உரை (ஆ)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் (இ).
4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு விரிவான அறிக்கை மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் திட்ட சுருக்க உரைகள் (ஈ).
5. எழுத்து வடிவில் பெறப்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள்(உ) - 11 எண்ணிக்கை

20/6/25

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை.

வருவாய் கோட்டாட்சியர்,
இலுப்பூர்